உ

திருச்சிற்றம்பலம்.

சிதம்பரம்

ஸ்ரீ மௌனகுரு ஞான தேசிகர்

# தோத்திரக் கொத்து

இது

திருவண்ணாமலை

**ஸ்ரீ ஈசானிய ஞானதேசிகர்**

திருவாய்மலர்ந்தருளியது

காரைக்குடித் திருவாளர்

சா. நா. அ. சோ.

சொக்கலிங்கம் செட்டியாரவர்களுக்கு

விக்கிரம௵ புரட்டாசிமீ ௯௳ [25—9—40]

நடைபெற்ற

அறுபதாவது ஆண்டு நிறைவுவிழாவின் போது

வழங்கப்பெற்றது.

சிதம்பரம்

**ஸ்ரீ மௌனதேசிகர் மடாலய**

வெளியீடு.

...கன் பிரசில் பதிப்பிக்கப்பெற்றது.

1940

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிதம்பரம்

ஸ்ரீ மௌனகுரு ஞான தேசிகர்

# தோத்திரக் கொத்து

இது

திருவண்ணமலை

**ஸ்ரீ ஈசானிய ஞானதேசிகர்**

திருவாய்மலர்ந்தருளியது

காரைக்குடித் திருவாளர்

**சா. நா. அ. சொ. சொக்கலிங்கம் செட்டியாரவர்களுக்கு**

(விக்கிரம௵ புரட்டாசிமீ ௰௳ (**25—9—40**) நடைபெற்ற)

அறுபதாவது ஆண்டு நிறைவுவிழாவின்போது

வழங்கப்பெற்றது.


சிதம்பரம்

**ஸ்ரீ மௌனதேசிகர் மடாலய**

வெளியீடு.

1940

சிவமயம்.

# மாகேசுர பூசைத் தோத்திரம்.

---

ஆசார லிங்கமாய் நாசிதனி லேயிருந்
தானமண மேகொள்ளு வீர்
அரியகுரு லிங்கமாய் நாவுதனி லேயிருந்
தமுதுசுவை யேகொள்ளு வீர்
மாசேது மில்லாத பிரசாத லிங்கமாய்
வந்து செவி யோசைகொள் வீர்
மனமதனி லேயிருந் தேமகா லிங்கமாய்
மகிழ்விடய மேகொள் ளுவீர்
தேசார்ந்த சிவலிங்க மாய்விழியி லேநின்று
திருவுருக் கண்டுமகிழ் வீர்
செய்யசங் கமலிங்க மாய் அங்க மதில்நின்று
திகழ்பரிச மேகொள்ளு வீர்
தாசோக மார்க்கமுறு பத்தர்மேற் றயவாகி
சடுஸ்தலம லிங்க மாகித்
தற்பரா னந்தசிவ மாயிஷ்ட லிங்கமே
சச்சிதா னந்தசிவ மே.

---

சபாநாயகர் செய்விக்கிற மாகேசுர பூசை
சபாநாயகருக்கே பிரீதியாக அனுக்கிரகம்
பண்ணிரக்ஷிக்க (ஹரஹர)

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டு மயன்மாற் கரியோய்நீ வேண்டியென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தா யானு மதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னி லதுவு முன்றன் விருப்பன்றே.

திருச்சிற்றம்பலம்.

# முன்னுரை.

திருவண்ணாமலை ஸ்ரீ ஈசானிய ஞானதேசிகர் தம் பரமாசாரியராகிய சிதம்பரம் ஸ்ரீ மௌன சற்குரு ஞானதேசிகர்மீது தோத்திரமாகத் திருவாய் மலர்ந்தருளிய நூல்களுள் பஞ்சரத்தினம் சிகாமணிப்பதிகம் என்னும் இரண்டு நூல்களும் இவ்வெளியீட்டின் கண் சேர்க்கப்பெற்றுள்ளன.

இவைகள் ஏறக்குறைய நாற்றெண்பது ஆண்டுகட்கு முன் இயற்றப்பட்டனவாயினும் இதுகாறும் அச்சிடப்படாதிருந் தமையின் இவற்றை முன்னதாக வெளியிடலாயிற்று. ஏனையவையும் பரிசோதிக்கப்பெற்றுப் பின்னர் வெளியிடப்பெறும் பதிப்புக்களில் சேர்க்கப்படும்.

ஸ்ரீ மௌனகுருஞானதேசிகரின் திருவருட் பிரசாதப் பெரு விருப்பங்கொண்ட அன்பர் பலரும் இவற்றைப்பாராயணஞ் செய்யவேண்டுமென்னு மெண்ணத்துடன் அச்சியற்றித்தரவேண்டுமென்று விரும்பினதற்கிணங்க இவற்றை அச்சிட்டுக் காரைக்குடித் தனவணிகப் பெருஞ் செல்வரும் தேசிகசுவாமிகள்மீது மெய்யன்புள்ளவருமாகிய திருவாளர். சா. நா. அ. சோ. சொக்கலிங்கம் செட்டியார், அவர்களின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவின் நினைவுக்குறியாக வெளியிடுகின்றனம்.

அறுபதாண்டு நிறைவுற்ற அன்னார் இன்னும் பலவாண்டுகள் வாழ்ந்து இகபரசாதனங்களைப்பெறத் திருவருளை வழுத்துகின்றேம்.

சிதம்பரம்.
விக்கிரம ஆவணி-29.

இங்ஙனம்,
**காஞ்சி. சுப்பிரமணிய அடிகள்.**

# குரு மரபு வாழ்த்து.

சீரேறு தண்கயிலைச் சிவபெருமான்
திருவருளாற் றிகழ்பூம் பொம்மைப்
பாரேறு பாலகித்த சந்ததிக்கோர்
மெஞ்ஞான பானு வாகிக்
காரேறு பொழிற்றில்லை வாழ் மௌன
குரு தேவன் கதிர் வேற் பெம்மான்
தாரேறு மரபுடையோன் றிருமரபு
நீடூழி தழைக மாதோ.

சிவமெனும் பொருளே கருணையான் மனிதச்
சீருருக் கொண்டுவந் தெனது
பவமறும் படியே வாண்டருள் மௌன
பரமசற் குருவைமற் றவன்றன்
தவவடி போற்றுஞ் செல்வமா தவனைச்
சார்பொனம் பலவிறை தன்னை
யவனருள் பெற்ற வசவநா யகனை
யறுமுகப் பொருளையாம் பணிவாம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீ மௌன குரு ஞானதேசிகர் திருவடி வாழ்க.

## பஞ்சரத்தினம்.

காப்பு

திகழு மோனநற் றேசிகன்றே ண்மிசை
புகன் மலர்க்கவி மாலை புனைந்திடக்
ககன சிற்பதி மீதுறை கற்பகன்
மகிமை மிக்க மலர்ப்பதம் போற்றுவாம்.

நூல்

நித்யபரி பூரண வகண்டசாட் சாத்கார
நிர்மலா னந்த மய மாய்
நிர்க்குண விலாசமாய் வாக்குமன மணுகாத
நிர்வாண மோனவடி வாய்ச்
சத்யவருள் மேனிகொண் டுலகிலவ தாரமாய்த்
தானெழுந் தருளி வந்து
சமயநிலை யாவையு மொருசமன தாகவே
தான்கண்டு மேலாக வே
முத்தி முத லானநின் னருள்சேர்ந்த வன்பரடி
முடியாக வைத்து நின்னை
மூவுலகு தொழுதில்லை யம்பல நடம்புரியு
முதல்வனென வேகப்பி னே

னத்தியுரி போர்த்தவா மத்தமதி கூவிள
மணிந்தவா கங்கா தரா
ஆயிகுள மேவிவளர் மோனகுரு நாதனெனு
மானசிவ ஞானகுருவே. (க)

கல்லாலி னீழலிற் சென்றிருந் தாயமல
காருண்ய வடிவ மாகிக்
கண்மூன்று நவ்விமழு கையினிடை யேந்தியொரு
காலதனின் மாயையெ னுமேற்
செல்லாம லேமிதித் தங்கிருந் தேநால்வர்
செப்பரிய முத்திபெ றவே
சித்தாந்த வேதாந்த சமரச முணர்த்தியவர்
சிற்சொருப மொத்த வதனு
லெல்லாரு மிந்தவழி யாகவர வென்றுலகி
லேழையடி யார்க ளிடமா
யின்பமக ஞன் மனுட ரென்றவடி வாய்மவுன
மென்பதொரு கோலமுடனே
யல்லாம லவதூத வேடமது காட்டிவெகு
வாயடியர் சென்று தொழவே
யாயிகுள மேவிவளர் மோனகுரு நாதனெனு
மானசிவ ஞானகுருவே. (உ)

சஞ்சல விசுத்தொழில் புரிந்துமன மானது
சகத்திடை நடித்து மென்மேற்
சாலங்கள் செய்துவெகு வாகநின் றேயொருவர்
தானுநிக ரில்லை யெனவே

வஞ்சகக் கள்வரென நிற்கின்ற வைம்புல
வழிக்கோடி பரசு செய்து
வாதாடி யேசுழலு மென்னசெய் வேனதனை
வலிமெத்த வாகை யாலே
தஞ்சமென நின்னருளை நம்பினே னென்னைநீ
தற்காத்தி ரட்சிகண் டாய்
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்த சிவமா
யஞ்சலென வேகர மமைத்து வட நீழல்வள
ராதியே யம்ப லத்து
ளாயிருள மேவிவளர் மோனகுரு நாதனெனு
மானசிவ ஞானகு ருவே (௫)

கற்றகலை நூற்பல பிதற்றியுல கத்தினிற்
கண்கெட்ட குருட ரைப்போற்
கண்மூடி மனநினைவி லெண்ணுத வெண்ணியே
கங்குல்போ லஞ்ஞா னமே
யுற்றவனு பவமாகி மத்தவெறி யினர்போல
வுழல்கின்ற நாயி னேனு
மூர்ப்பன்றி போலவே மலமாயை கன்மத்
துழன்றறிவு கெட்டி டாமற்
சித்தமது தெளியவொரு மித்தநிலை யருள்வையோ
சின்மயா னந்த வடிவே
சிற்சொருப மாயறிவு தற்சொருப மாயடியர்
துக்கமது தீரவெ னவே

யத்தமதி லேஞான முத்திரை பிடித்தவரு
ளானந்த மேவடி வமா
யாயிகுள மேவிவளர் மோனகுரு நாதனெனு
மானசிவ ஞான குருவே (௪)

வேதாக மங்கள்பல கலைகளை யுணர்ந்துமென்
வேதாந்த சித்தாந்த நூல்
வித்தார மாகவே கற்றுமென் னப்பொருள்
விளங்கவொரு வர்க்கோ தியென்
பேதாதி மயமான சமயநடை சார்ந்துமென்
பிறவிவினை தீர்க்கவெ ளிதோ
பிரபை யொளி வீசியுன் னருளுதய மாகின்ற
பேரின்ப நிட்டைய ருள்வா
யோதாதி மொழிஞான முத்திரை கரத்தினிடை
யுண்மையிது வென்று காட்டி
யுள்ளபடி யறிவித்து மறியாத வென்போலு
முயிர்கடமை யாண்டு கொள்ள
வாதார பாதமல ரீதென்று காட்டிநட
மாடுதிரு வம்ப லத்து
ளாயிகுள மேவிவளர் மோனகுரு நாதனெனு
மானசிவ ஞானகு ருவே (௫)

பஞ்சரத்தினம் முற்றுப்பெற்றது.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிகாமணிப்பதிகம்.

---

அவனி மீதினி லன்பரை யாண்டிடச்
சிவனிம் மானிட தேகங் கொடுவருந்
தவநி லாவிய தில்லைத் தலத்தின்வாழ்
மவுன தேசிகன் சேவடி வாழ்த்துவாம்.

திருவளர் சிகராத் திரியிம மலைதன்
செல்விமான் மழுக்கள விடமுந்
திகழ்சதுர்ப் புயமும் பாலலோ சனமுந்
திரள்சடை யுறைநதி மதியுங்
கருநிறக் களிற்றி னுரிவையும் பணியுங்
கரந்துயிர்க் கிரங்கியித் தரைக்கண்
கருணையே வடிவாய் மவுனமுத் திரைசேர்
கரசர ணதிசாங் கமதாய்
இருவினை சமமாய் மலபரி பாக
மிசைந்தநா டன்னில்வந் தெனையாண்
டின்பவீ டளிக்க மென்பதஞ் சூட்டு
மிறைவனே கிருபைவா ரிதியே
மருமலி வனஞ்சூழ்ந் திருளற விளங்கும்
வளரருட் டில்லைமா நகரின்

மன்னிவா முரசே யுன்னுமா ரமுதே
மவுனதே சிகசிகா மணியே (க)

பூதலந் தன்னிற் பிறந்திரு வினையாற்
புண்யமில் பாவமே புரிந்து
புகழிக மூறவு பகையிவை யதனாற்
பொருவிலா மனத்துய ரெய்திச்
சூதருங் கவடு புலைகொலை களவு
துணிவிலாப் பயம்பிணி முதலாந்
துக்கசா கரத்தி லழுந்திடா வகைநின்
றுணைமலர்ப் பாதமே யளித்துச்
சாதனை புரிந்தே யிலங்குசிற் சொரூப
சமாதியைப் பெறநனி முயலுஞ்
சரியைநற் கிரியை யோகமுங் கடந்த
தற்பர ஞானமே தருள்வாய்
மாதவ முனிவர் சீதரன் முதலோர்
மருவிய தில்லைமா நகரின்
மன்னிவா முரசே யுன்னுமா ரமுதே
மவுனதே சிகசிகா மணியே (உ)

என்னதி யானென் றிருஞ்செருக் கதனு
லிருநிலந் தனிற்பிறந் திறவா
தின்பவீ டதனைக் கரதலா மலகத்
தின்கனி போலவே காட்டிப்
பொன்னையும் புவியும் மின்னையும் விரும்பும்
புன்மதி தன்னைநன் மதியாற்
போக்கியஞ் ஞான விருடனைத் துரந்து
புகலுமைங் கோசமுங் கடந்த

தன்னையு முணர்த்திச் சகமெலாம் பரமன்
றன்மய மென்னவுங் காட்டிச்
சகலகே வலமிவ் விரண்டையு நீக்கித்
தனிப்பர முத்தியை யருள்வாய்
வன்னமா மதில்சூழ்ந் தமலமாய் விளங்கு
மகிமைசேர் தில்லைமா நகரின்
மன்னுவாழரசே யுன்னுமா ரமுதே
மவுனதே சிகசிகா மணியே (௩)

நாடரும் பொருளாய்ப் பரமகே வலமாய்
ஞானவா காயசூக் குமமாய்
நடுவடி முடிவு மில்லதாய்ச் சுயம்பாய்
நற்சிவா காரநிட் களமாய்த்
தேடரும் பரம சச்சிதா னந்த
சிவபரி பூரண மதனைத்
திருவருட் கடாட்ச பார்வையா லடியேன்
றெளிந்திடக் காணுமா றருளாய்

கேடிலா வின்பந் தரவெனக்கெண்ணிக்
கிளர்திரி மூர்த்தமா யெழுந்து
கேட்டல் சிந்தித்தல் தெளிதலு மருநூற்
கேள்வியா லுணர்த்திவீ டளிக்கு
மாடமா ளிகைபோய் விண்ணக டுரிஞ்சும்
வளமலி தில்லைமா நகரின்
மன்னிவா ழரசே யுன்னுமா ரமுதே
மவுனதே சிகசிகா மணியே (௪)

பாசமா ஞானப் பரிவினுன் மிகவும்
படர்பசு ஞானமா மதனைற்

பரமதற் சிவத்தை யறிவொணு தென்றே
பதியெனு ஞானமே யருளித்
தேசதா வெனது சிற்றறி வொழித்துச்
சிறந்தபே ரறிவினுற் றெளியத்
திரியுயிர்க் கரண போதமுங் கடந்த
சிவகர ணத்தொடுஞ் சேர்த்து
நேசமோ டருளாய்த் துவிதபா வனைக்க
ணீக்கிபத் துவிதமாய்ச் சுகமாய்
நிராசையென் னிலத்தி னில்லென வருளாய்
நிமலனே நிறைபரஞ் சுடரே
வாசமாம் புனலா ரனவயல் சூழும்
வளமலி தில்லைமா நகரின்
மன்னிவா ழரசே யுன்னுமா ரமுதே
மவுனதே சிகசிகா மணியே. (௬)

பதிபசு பாச மெனுந்திரி விதத்திற்
பதியிலக் கணமிவை யெனவும்
பகர்ந்ததிற் பாச மைவகை யெனவுயிர்ப்
பகுதிலட் சணமிவை யெனவுங்
கதிபெறுஞ் சீவன் மூவிதஞ் சகல
கலருடன் பிரளயா கலருங்
கருதும்விஞ் ஞான கலரிறை யொருவன்
காணரும் பொருளென வருளும்
விதிமுறை மறையின் முடிவினி லாடும்
மெய்ப்பரா னந்தவா ரிதியை
விழிகளாற் கண்டு மனமொழி தினமும்
விரவுபே ரின்பவெள் ளமதாய்

மதிமிகும் பெரியோர் மறையவர் பரவும்
வளமலி தில்லைமா நகரின்
மன்னிவா முரசே யுன்னுமா ரமுதே
மவுனதே சிகசிகா மணியே (௬)

இறைபரு லணுவுந் திரோபவ மலமூன்
றியம்புபஞ் சாக்கர நிலையு
மெண்ணுபூ தாதி நாதமீ றான
வெழிலுறு தத்துவ நிலையு
மறைதரு தூல சூக்கும நிலையு
மரியகா ரணமகா நிலையு
மத்துவா வாறி னடங்கிய நிலையு
மருட்சிவ யோகமா நிலையுந்
துறவினி னிலையு முத்திரை யகனற்
சுகம்பெறு ஞானமா நிலையுந்
துகளற வன்பர்க் கிவையெலா மருளிச்
சொருபநன் னிட்டைதந் தருள்வாய்
மறுகுவா தனைக ளீர்த்தருள் புரியும்
வளமலி தில்லைமா நகரின்
னிவ முரபேசு ன் யுன்னுமா ரமுதே
மவுனதே சிகசிகா மணியே (எ)

மிகுஞ்சமு சார மெனுங்கட லழுந்தி
மெல்லியர் மயலெனுஞ் சேற்றில்
மிளிர்சகோ தரமா மெனுமவா வதனல்
விளைவுறுஞ் சுதனெனு மீனாற்

சகந்தனிற் கிரக மெனும்வட வனலாற்
றுகமா மெனுந்தரங் கத்தாற்
றவித்திடா துனது பவப்புணை பிடித்துத்
தமியனே னுய்யுமா றுளதோ
வுகந்துத தியினீ ருவரினை யகற்றி
யுலகினிற் கொடுத்தலின் மேக
முததியிற் கூடு நீரினைப் போல
வுழலுமென் றனக்கினி திரங்கி
மகிழ்ந்தருட் பார்வை நல்கியாண் டருளும்
வளமலி தில்லைமா நகரின்
மன்னிவா முரசே யுன்னுமா ரமுதே
மவுனதே சிகசிகா மணியே (அ)

சதுர்முனி வருக்காய்த் தக்ஷிணா மூர்த்தந்
தானென வருந்தயா நிதியே
தனையுணர்ந் தரிய சாதனை முயலுந்
தவத்தர்பா லணுகிலே னெனினு
மதிகமாம் பரம பதமெனக் களித்தா
யன்புபூண் டந்நெறி யுணரா
தைம்புல நெறியிற் கறங்கெனச் சுழலு
மடியனே னுய்வகை யருள்வாய்
பதுமவா சனத்தி லிருத்தியென் றுயரப்
பவப்பிணி தீர்க்குநன் மருந்தே
பகர்மல திமிரந் துரந்திடுஞான
பானுவே பரமசற் குருவே

மதுமலர்ப் பொழினெற் றடவயல் புடைசூழ்
வளமலி தில்லைமா நகரின்
மன்னிவா ழரசே யுன்னுமா ரமுதே
மவுனதே சிகசிகா மணியே (கூ)

பண்டைமும் மலமுங் கருடபா வனையாற்
பருவிடந் தீர்ந்திடு மதுபோற்
பகருதற் கரிய சோகபா வனையாற்
பாறுமென் றருள்பரா பரனே
தொண்டர்க டமது பவமிரிந் தோடச்
சொருபமா மனுபவ மருளிச்
சுத்தவே தாந்த நித்தியா னந்த
சுகோதய ஞானபே ரொளியே
யண்டர்கோன் பிரமன் முகுந்தனு முணர
வரியமெய்ப் பரம்பொரு டன்னை
யவ்வுயிர் போல வறிவினி னுணர்த்து
மருளினை மறப்பனோ வடியேன்
மண்டல மதனின் மேன்மையாய் விளங்கும்
வளமலி தில்லைமா நகரின்
மன்னிவா ழரசே யுன்னுமா ரமுதே
மவுனதே சிகசிகா மணியே (ய)

(சிகாமணிப்பதிகம் முற்றுப்பெற்றது.)

# வாழ்த்து.

---

அருட்டரும் பூதி வாழி அக்கமா மணியும் வாழி
கருமவஞ் செழுத்தும் வாழி தகுஞ்சிவ லிங்கம் வாழி
பெருமைசே ரடியார் வாழி பிரசாதம் தீர்த்தம் வாழி
திருவளர் பெருகு மோன தேசிக னடிகள் வாழி

உன்னுமென் றன் முறைகேட்குந் திருச்செவிகள்
வாழிதிரு வுள்ளம் வாழி
நன்னயமாம் பூதியணி திருமேனி
வாழியரு ளுவும் வாழி
பன்னுமடி யவர்தமக்குக் கருணைபொழி
விழிவாழி பரிந்தெஞ் ஞான்று
மன்னுசிரம் பரம்வாழி மௌனகுரு
மலர்ப்பதங்கள் வாழி வாழி

உ

சிவமயம்.

# ஸ்ரீகாசியாத்திரை விளக்கம்.

இதன்கண் சென்னையிலிருந்து பம்பாய் வழியாக அரித்துவாரம் ரிஷிகேசம் வரைசென்று காசிக்கு வரும்படியும், அங்கிருந்து கயா கல்கத்தா வழியே சென்னைக்குத்திரும்பி வரும்படியாகவும் இடையேயுள்ள முக்கியமான தலங்கள், பட்டணங்கள், ஆங்காங்குள்ள மூர்த்தி தீர்த்தம் ஆலயமுதலிய பிறவிசேஷங்கள், நகரங்களிலுள்ள விசேஷம், ஒவ்வொரு ஊருக்கும்தூரம், தங்குமிடம் பிறவசதிகள் முதலிய எல்லாவற்றையும் நன்றாக விளக்கி எழுதப்பட்டிருக்கிறது சுருங்கக் கூறுமிடத்து இப்புத்தகத்தின் உதவியைக்கொண்டே பல முறையாத்திரை செய்து வந்து பழக்கமுடையோர் போல் யாத்திரையை முடித்துக் கொண்டுவரலாம்.

விலை அணா. 6.

மூவர் தேவாரம் அடங்கன்முறை பெரியபதிப்பு ரூ 3-0-0

ஸ்ரீசாந்தலிங்கசுவாமிகள் அருளிச்செய்த நூல்கள்

விலை ரூ 1-4-0

(இதன்கண் கொலைமறுத்தல் வைராக்கியசதகம் வைராக்கிய தீபம் அவிரோதவுந்தியார் என்னும் நான்கும் அடங்கியுள்ளன)

| | |
|---|---|
| செங்குந்தர் பிரபந்தத்திரட்டு .... | ரூ 1—4—0 |
| சித்தாந்தப்படம் .... .... .... | ரூ 1—0—0 |
| திருக்குறள். பொழிப்புரையுடன் .... | ரூ 0—6—0 |
| திருவாசகம் மூலம் .... .... | ரூ 0—3—0 |
| விநாயகரலங்காரம் விநாயகரனுபூதி | ரூ 0—2—6 |
| வாக்குண்டாம் புதிய திருத்தமான பதிப்பு | ரூ 0—1—0 |

கிடைக்குமிடம்:—

39-நெ. சபாநாயகர்தெரு, சிதம்பரம்.